


FREE EDITION

April - 2012

ஜோதி 6: சுடர் 02 - 62

# ஜோதி

ஆன்மிகச் செய்திச்சுடர்

# Jothi

Spiritual Newsletter

மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

மன்ற ஆண்டு நிறைவு

**"கலச விளக்கு வேள்விப்பூஜை"**

**05.04.2012**
மாலை 7.15 மணி
குரு பூஜை

**06.04.2012**
மாலை 6.05 மணி
**கலச விளக்கு வேள்விப் பூஜை**

மன்ற வேள்வியில் கலந்து குருவின் குருவருளையும் அன்னையின் திருவருளையும் பெற்று வளம்பெற அனைவரையும் அழைக்கின்றனர் செவ்வாடை சக்திகள்

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(பதிவு எண் – ௨193)
விக்டோரியா-அவுஸ்திரேலியா

## கலச விளக்கு வேள்விப் பூசைகள்.

### வேள்வியின் முக்கியத்துவம்

"நாளைய உலகிற்கு ஆன்மிகமும், வேள்விகளும் அவசியம்"

### தூய்மைக்கும் பாவக்கழிவிற்கும்

"மருத்துவ விடுதிகளில் அறுவை அரங்கங்கள் உண்டல்லவா? நோயாளிகட்கு அறுவை சிகிச்சை முடிந்த பிறகு அவற்றைத் தூய்மைப்படுத்துவது இயல்பு. அதுபோல ஆலய விழாக்களில் பக்தர்களைத் தூய்மைப்படுத்தவும் அவர்களின் பாவக்கழிவுகட்கும் இந்த வேள்விகள் உதவும். விழாக்களைப் புதுப்பிக்கவும் வேள்விகள் உதவும்."

### கலச தீர்த்தம்

"கலச தீர்த்தத்தை வீட்டைச் சுற்றித் தெளிப்பதால் உங்கள் குடும்ப ஊழ்வினை நீங்கும்."

### குடும்பத்தோடு கலந்துகொள்

"குடும்பத்தோடும் குழந்தைகளோடும் கலச விளக்குப் பூசைகளில் கலந்துகொள். அதனால் ஏற்படும் பயன்களைத் தக்க காலத்தில் உணர்ந்து கொள்வாய்".

**அன்னையின் அருள்வாக்கு**

### வேள்வியின் பயன்

"ஒரு குடும்பத்தைத் திருத்த அதன் தலைவனைத் திருத்தினால் போதும். ஓர் ஊரைத் திருத்த ஒரு கிராமத்தைத் திருத்தினால் போதும். உலகத்தைத் திருத்த ஒரு நாட்டைத் திருத்தினால் போதும். இங்கு நீங்கள் போடும் சக்கரமும், கலச விளக்கு பூசையும் அண்டங்கள் அனைத்தையும் வழிப்படுத்த உதவும்."

### அமைதிக்கு

"சக்கரம், தெய்வீகம், ஆன்மிகம் ஆகியவை மனிதனுக்கு அமைதியைக் கொடுக்கும். மனிதனை ஆட்டிப்படைப்பது ஆன்மா!"

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**"கலச விளக்குகட்கு விலை வைப்பது உன் பாவமூட்டை குறைய!"**

சுடரில்.....

கலச விளக்கு வேள்விப் பூசைகள்

பக்கம் - 1-3

□□□

UPCOMING EVENTS

Melbourne – Pg 7 & 8
Sydney _ Pg 9
Brisbane _ Pg 11

□□□

திருமதி அம்மா பதில்கள்

பக்கம் : 14

□□□

அருள்வாக்கும் அனுபவங்களும்..

பக்கம்: 10–11, 17

□□□

Divine Miracles

Pg: 16

□□□

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 15

□□□

சூடான கலச தீர்த்தம்

பக்கம் : 4 - 6

## கலச விளக்கு வேள்விப்பூசை...

### வேள்விப் புகை

“உலகில் பல மூலிகைகள் உண்டு. ஆஸ்துமா, இழுப்பு போன்ற நோய்கட்கு வேள்விப்புகை மருந்தாக அமையும்.”

### பள்ளிப்படிப்பும் - ஆன்மிகப் படிப்பும்

“நாற்பது பிள்ளைகள் கூடிய ஒரு வகுப்பில் அவரவர் திறமைக்கும், உழைப்புக்கும் தக்கவாறு பயன் கிடைக்கிறது. அதுபோல ஆன்மிகத்திலும், வேள்விக்கலசம், விளக்கு ஆகிய பூசைகளில் கலந்துகொண்டு பங்குபெறும்போது அவரவர் பக்திக்கு ஏற்பப் பலன் உண்டு.”

### வேள்வியும் - பயனும்

“இங்கே நடைபெறுகிற வேள்வியைப் பார்த்து அமைதியாக இருந்தாலே உங்கட்குப் பயன் உண்டு. தியானம் செய்த பலன், யோகம் செய்த பலன் உண்டு. இந்த மந்திர ஒலிகள் உங்கள் உடம்பின் மேல் பட்டால் பெரும் பயன் உண்டு.”

### கலச விளக்குப் பூசைகளை முறைதவறிச் செய்யக் கூடாது

“கலச விளக்கு வேள்விப் பூசைகளை எப்போது யார் செய்தாலும் மழை வரும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அடிகளார் அனுமதியுடனும், பக்தியுடனும் நான் அருளிய வழிமுறைகளுடனும், முறைப்படியும் செய்தால்தான் பலன் கிடைக்கும். வேள்விப்பூசைகளை வியாபாரமாக ஆக்கக் கூடாது.”

### வேள்விப் பூசை

“சாதாரணமாக உடைத்து, எறிந்து வீசப்படுகிற பூசணிக்காயை இன்று தெய்வமாக மாற்றியிருக்கிறேன் மகனே! இதுபோல உதிரி பக்தர்களையும் தெய்வமாக்குவேன் மகனே!”

### வேள்வி

“மன்றத்தினர் வேள்விகளை வியாபாரமாக ஆக்கக்கூடாது. அவ்வாறு ஆக்கினால் விஷமாக மாறிவிடும்.”

### கலச வேள்விப்பூசைகள்

“உங்களிடம் உள்ள அறியாமையை நீக்கி, அறிவை வளர்ப்பதற்காகவே கலச விளக்கு வேள்விப்பூசை.
யாகம் யோகத்திற்கு உதவும். ஓம் என்ற ஓங்கார ஒலிக்கும் பயன்படும். உயர்வு தாழ்வுகள் நீங்கவும் பயன்படும்.
இயற்கையை ஒட்டி நீங்கள் வாழ்வதற்கு வேலிபோலப் பாதுகாக்கும்.
உலகத்திலுள்ள சலசலப்புகள் நீங்கிக் கலகலப்பு ஏற்படக் கலசங்கள் உதவும்.
அதர்மங்கள் நீங்கித் தர்மங்கள் செழிக்க வேண்டுமானால் கலச வேள்விப்பூசை அவசியம்.
மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என்று பாராமல் எல்லோரும் பூசை செய்ய வேண்டும்.

(தொடர்ச்சி....3ஆம் பக்கம்)

## கலச விளக்கு வேள்விப்பூசை...

எந்த வேள்விக்குப் போனாலும் வந்தாலும் பெண்கள் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பருத்தி நூல் புடவைதான் உடுத்த வேண்டும். ஜாக்கிரதையுடன் யாக சாலையில் எண்ணெய் ஊற்ற வேண்டும்.''.

### ஆன்மிக மாநாடுகளும் - வேள்விகளும்தான் பரிகாரம்

''இன்று உலகமே கொந்தளிப்பாக இருக்கிறது. இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி உலகம் அமைதிபெற வேண்டுமானால் கலச விளக்குப்பூசைகளும், ஆன்மிக மாநாடுகளும் தேவை.

உலகம் அமைதி பெற ஆன்மிக மாநாடு நடத்த வேண்டும் என்று தாயிடம் நீங்கள்தான் வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஆன்மிக மாநாடுகளும், கலச விளக்கு வேள்விப்பூசைகளும் உங்கட்காகவே தவிர எனக்காகவோ, அடிகளாருக்காகவோ அல்ல!

எந்த அரசும், எல்லோருக்கும் சேர்த்து, எந்த நன்மையையும், பாதுகாப்பையும் அளித்துவிட முடியாது. உனக்கு நீதான் பாதுகாப்பு!''

### சாந்தி வேள்வி

''உலகில் திடீர் மரணமடைந்த 400 பேர், 500 பேர் என இறக்கும்போது மரணமடைந்த ஆன்மாக்கள் அமைதியடையாமல் பேயாக அலையும். இவற்றை ஆன்மிகத்தால்தான் சாந்தி செய்ய வேண்டும். அக்கிரமங்களினால் சாந்தி செய்ய முடியாது.''

### வேள்வி

''உங்கள் வேதனைகளைத் தீர்க்கத்தான் வேள்வி!''

### குடும்பத்துடன் வேள்வியில் கலந்துகொள்

''தாய் ஆரோக்கியமாக இருந்தால்தான் சேய் ஆரோக்கியமாக இருக்கும். ஆதலால் வேள்விப் பூசைகள் நடக்கும்பொழுது குடும்பத்துடன் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டும்.''

### ''சக்கரங்கள்'' - பற்றி

''கோடுகள் கோணங்களாகும்
கோணங்கள் கோலங்களாகும்
கோலங்கள் கோணலாகும்
கோளங்கள் கோணலாகும்.''

### வேள்வி

''வேதனை தீர்வதற்கும் வினைகள் அழிவதற்கும்தான் வேள்வி. யாக குண்டத்தில் உள்ள ஒரு கல்லை எடுத்துச் சென்று வீடு கட்டலாம். அல்லது பூசையறையில் வைத்து வழிபடலாம்.''

### வேள்வி ஏன்?

''மனிதனுக்கு உணவும், உடையும், தண்ணீரும் எவ்வளவு தேவையோ அது போல மனித குலத்துக்கு வேள்விகள் தேவை.''

### அகமும் புறமும்

''கலச விளக்கு வேள்விப் பூசைகள் எத்தனை செய்தாலும், உன் உள்ளம் கலச யாக குண்டங்களாக மாற வேண்டும்.''

# சூடான கலச தீர்த்தம்

## ஆர்வெள்ளோடு வேள்வி

திண்டுக்கல் மாவட்டம் ஆர்வெள்ளோடு என்ற கிராமத்தில் சக்தி குமரேசன் மன்றத் தலைவராக இருந்து ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் நடத்துகிறார். அவர் மன்றத்தில் திண்டுக்கல் மாவட்ட வேள்விக்குழு வேள்வி செய்யச் சென்றபோது என்னையும் வேள்வி செய்ய அழைத்து, நானும் வேள்விக்குச் சென்றேன். வேள்விக்கு முதல்நாள் மழை பெய்தது. மாலை முதல் மின்சாரம் இல்லை. எனவே, வேள்வியன்று காலையில்தான் சக்கரம் போட்டு மதியம் 12.30 மணிக்கு வேள்வி துவங்கினோம்.

## நடைப்பிணமாக வந்தவர்

அந்த வேள்வியில் கலந்துகொண்டு கலச அர்ச்சனை செய்வதற்காக ஒரு பெண் மாட்டு வண்டியில் அழைத்து வரப்பட்டார். அவரால் நடக்க முடியவில்லை. இருவர் கைத்தாங்கலாக அழைத்து வந்தார்கள். உடல் வாடி மிக மெலிந்திருந்தார். கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவராகக் காணப்பட்டார். நடைப்பிணம் போன்றிருந்த அந்தப் பெண்ணைத் தூக்கி வந்து கலச அர்ச்சனைக்காக வேள்வியில் உட்கார வைத்தார்கள்.

## அன்னைக்கு அபிஷேகம்

வேள்வியில் மந்திரங்கள் படித்து முடிந்தவுடன் அன்னையின் திருவுருவப்படத்துக்கு அபிடேகம் செய்ய வேண்டும். கலச அர்ச்சனை செய்தவர்களின் கைகளில் கலசங்கள் எடுத்துக் கொடுத்தோம். கலசங்களைக் கையில் ஏந்தி மூன்று முறை வேள்விக் களத்தைச் சுற்றி வந்து அன்னைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். அந்த நோயாளிப் பெண்ணை ஆடவர் ஒருவர் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வேள்விக் கலசத்தை மூன்று முறை சுற்றி வந்தார்.

Dr.C.A.**முத்துகிருஷ்ணன்** M.A., B.O.I., PhD.
கோயம்புத்தூர்

## சூடான கலச தீர்த்தம்

அபிடேகம் செய்யும்போது படத்தின் இருபுறமும் இருவர் நிற்க வேண்டும். நானும் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் சக்தி கணேசனும் திருவுருவப்படத்தின் இருபுறமும் நின்றோம். வேள்விக் களத்தைச் சுற்றி வந்தவர்களிடமிருந்து நான் கலசத்தை வாங்கி சக்தி கணேசன் கையில் கலச தீர்த்தத்தை ஊற்றினேன். அவர் இரு கைகளிலும் கலச தீர்த்தத்தைப் பெற்று அன்னைக்கு அபிடேகம் செய்தார். அந்த நோயாளிப் பெண்ணின் கலசத்தை வாங்கி அதில் உள்ள தீர்த்தத்தை கணேசன் கையில் ஊற்றினேன். தீர்த்தத்தை கையில் ஏற்ற அவர் நடுங்கினார். அண்ணே! தீர்த்தம் சூடாக இருக்குதண்ணே! என்றார். அப்படியே அபிடேகம் நடத்திவிட்டோம்.

## கெடுதல் நேருமா?

அந்தப் பெண்ணை அழைத்து வந்தவர் அபிடேகம் ஆகி வேள்வி முடிந்ததும் என்னிடம் வந்தவர், ஏங்க அபிடேகம் செய்யும்போது தீர்த்தம் சூடாக இருக்கிறது என்று சொன்னாரே அதனால் கெடுதல் ஏதாவது நேருமா? என்று கேட்டார். ஆதிபராசக்தி முறைப்படி வேள்வி செய்த எல்லா இடங்களிலும் நன்மைதான் நடந்துள்ளது. தீர்த்தம் சூடாக இருந்தது உண்மைதான். அதனால் கெடுதல் நடக்கும் என்று சொல்ல முடியாது. எல்லாவற்றுக்கும் அன்னை ஆதிபராசக்தியை வேண்டிக்கொள்ளுங்கள் என்றேன். அந்தப் பெண்ணை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு அவர்கள் புறப்பட்டு போய்விட்டார்கள்.

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

# சூடான கலச தீர்த்தம்....

## உங்களைத்தான் சக்தி

அந்த ஆண்டு ஜூலை மாதத்தின் கடைசி வாரம். நான் ஒரு நாள் என் கல்லூரியில் பேராசிரியர் அறையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது ஒருவர் எங்கள் அறையில் நுழைந்து யாரையோ தேடுவதுபோலப் பார்த்தார். ஜூலை மாதத்தில் மாணவர் சேர்க்கை (Admission) விஷயமாகத் தெரிந்தவர்களைப் பார்த்து விபரம் அறிந்து கொள்வதற்காகப் பலர் கல்லூரிக்கு வருவதுண்டு. அப்படி வந்த ஒருவர் ஆசிரியர் ஒருவரைத் தேடுகிறார் என்று நினைத்து யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டேன். அவர், “உங்களைத்தான் பார்க்க வந்தேன் சக்தி” என்றார். ‘சக்தி’ என்ற வார்த்தையைக் கேட்டதும் இவர் நம்ப இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கண்டுகொண்டேன். உட்காருங்கள் என்று எதிரே கிடந்த நாற்காலியைக் காட்டினேன்.

## தங்கை ஒரு நோயாளி

என்ன விஷயம் என்று சொல்லுங்கள் என்றேன். சக்தி என் பெயர் கஸ்தூரி நாயுடு. மூன்று மாதம் முன்பு என் தங்கைக்கு மிகவும் உடல் நலம் இல்லாமல் ஆர்வெள்ளோடு வேள்விக்கு அழைத்து வந்தேன். அம்மனுக்கு அபிஷேகம் நடக்கும்போது கலச தீர்த்தம் சூடாக இருந்ததே அது என் தங்கை அர்ச்சனை செய்த கலச தீர்த்தம்தான். ஆர்வெள்ளேடு மன்றத் தலைவர் குமரேசன் என் உறவினர்தான். என் தங்கை ஒரு நோயாளி. குமரேசன் அது விஷயமாக உங்களைப் பார்க்கச் சொன்னார் என்றார்.

## கணவர் வாழ மறுப்பு

கஸ்தூரி நாயுடு அவர் தங்கையின் நிலைமையைச் சொல்லத் துவங்கினார். அவர் தங்கைக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. ஒரு நாள் அவருக்குப் பேச்சு வரவில்லை. வாயிலிருந்து தண்ணீராய் ஒழுகியது. எதுவும் சாப்பிட முடியவில்லை. கொஞ்ச நாளிலே ஆட்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. குழந்தையை எடுத்துப் பால் கொடுக்க மறந்தார். பைத்தியம் பிடித்தவர்போல் இருந்தார். அவருடைய கணவர் நோயாளித் தங்கையைத் தலையில் கட்டிவிட்டதாக நினைத்து குழந்தையையும் தாயையும் அழைத்து வந்து கஸ்தூரி நாயுடு (பெண்ணின் அண்ணன்) வீட்டில் விட்டுவிட்டார். இந்த நோயாளியுடன் தன்னால் வாழ முடியாது என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

## எந்த மாற்றமும் இல்லை

கஸ்தூரி நாயுடு தன் தங்கைக்குப் பெரிய பெரிய டாக்டர்களிடம் கூட்டிச் சென்று வைத்தியம் பார்த்தார். உடலில், குணத்தில் எந்த மாற்றமும் இல்லை. குழந்தையை எடுத்துப் பால் கொடுக்க வேண்டும் என்று கூட அந்தப் பெண்ணுக்குச் சுய நினைவு இல்லை. எட்டு மாதங்களாகப் பல வித வைத்தியம் பார்த்தும் எந்த மாற்றமும் இல்லை.

## வேள்வியில் கலந்துகொள்ளுங்கள்

ஆர்வெள்ளோடு குமரேசன் மன்ற விழாவுக்காக நன்கொடை வாங்க கஸ்தூரி நாயுடு வீட்டுக்கு வந்தார். நன்கொடை கேட்ட குமரேசனிடம் என் தங்கைக்கு நாளுக்கு நாள் உடல் மோசமாகி வருகிறது. நான் நன்கொடை கொடுத்து என்ன ஆகப்போகிறது? என்றார். அதற்கு குமரேசன் மன்றத்தில் வேள்வி நடக்கப் போகிறது. அதிலே உங்கள் தங்கையைக் கலந்துகொள்ளச் சொல்லுங்கள் என்றார்.

## எனக்குப் பசிக்கிறது

அதன்படி தங்கையை ஆர்வெள்ளோடு அழைத்து வந்து வேள்வியில் கலசத்திற்கு அர்ச்சனை செய்ய வைத்தார். அர்ச்சனை முடிந்து அபிஷேகம் செய்ததும் கலசத்தை எடுத்துக்கொண்டு மாட்டு வண்டியில் தன் தங்கையை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கஸ்தூரி நாயுடு வீட்டுக்குள் கூட்டிச் சென்றதும், அந்தப் பெண் தன் அண்ணன் மனைவியைப் பார்த்து, “எனக்குப் பசிக்கிறது என்றார். வியாதி வந்ததில் இருந்து கடந்த எட்ட மாதங்களாகத் திட உணவு எதுவும் வாங்கிச் சாப்பிடாத அந்தப் பெண் பசிக்கிறது என்று சொன்னதும் வீட்டினர்க்கு மகிழ்ச்சியாக இருந்தது. அன்று மதியம் சமைத்திருந்த சாதத்தைக்கொண்டு வந்து போட்டார். எல்லாவற்றையும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கையைக்கூட கழுவாது அப்படியே சாய்ந்து தூங்கிவிட்டாள். அடுத்த நாள் மாலை வரை ஆழ்ந்த தூக்கம். (தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

# சூடான கலச தீர்த்தம்....

## வேள்வியின் மகிமை

மறுநாள் மாலை எழுந்த பெண்ணுக்கு உறவினர்களை அடையாளம் தெரிந்தது. தன் குழந்தை எங்கே என்று கேட்டு வாங்கிப் பால் கொடுத்தார். கணவனை எங்கே என்று கேட்டார். பழைய மாதிரி எல்லாம் நல்லபடி இயங்கினார். டாக்டர்களினால் கைவிடப்பட்ட அந்தப் பெண் வேள்வியில் கலந்து கொண்டபின் அடையாளம் காண முடியாத அந்த நோய் அன்றே நீங்கியது. வேள்வியின் மகிமையை அந்தக் குடும்பம் முழுவதும் எண்ணி மகிழ்ந்தனர்.

## கணவர் வீட்டுக்கு

மேலும் ஒரு மாதம் சென்றது. அந்தப் பெண்ணுக்கு நோயின் அறிகுறி சிறிதும் இல்லை. பழைய நல்ல வாழ்க்கை அவரால் வாழ முடிந்தது. அதனால் கஸதூரி நாயுடு தன் தங்கையை அழைத்துச் சென்று கணவன் வீட்டில் விட்டு வந்தார். இந்த நிகழ்ச்சியை சொல்லிவிட்டு கஸ்தூரி நாயுடு இப்போது என் தங்கையிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அதைப் பாருங்கள் என்று என் மேஜை மீது ஒரு இன்லான்ட் (Inland letter) கடித்தைத் தூக்கிப்போட்டார்.

## பயந்து போனேன்

கடிதம் மேஜையில் வைத்ததும் அவருக்கு மறுபடியும் உடல் நலமில்லாமல் போய்விட்டதோ என்று பயந்துபோனேன். என்ன! உங்கள் தங்கைக்கு உடல் நலமில்லையா? என்று கேட்டேன். கடிதத்தைப் படித்துப் பார்த்தேன்.
அவர் தங்கை எழுதியிருந்த மடல் மகிழ்சியளித்தது. எந்தக் குறையுமின்றி உடல் நலத்துடன் இருப்பதாக எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து கஸ்தூரி நாயுடுவை நிமிர்ந்து பார்த்தேன். அவர் கண்களில் நீர் தேங்கியிருந்தது. என் தங்கையை அம்மா காப்பாற்றிவிட்டார்கள். அதை உங்களிடம் தெரிவித்துப் போகத்தான் உங்களைத் தேடி வந்தேன் என்று சொல்லி என்னிடம் விடை பெற்றுச் சென்றார். அன்னையின் வேள்வி மகிமையை நினைத்து என் உள்ளம் இறும்பூது எய்தியது.

ஓம் சக்தி அம்மாவே சரணம் அம்மா!

### அருள்திரு அம்மாவின் அவதாரத் திருநாளை முன்னிட்டு

# ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

அருள்திரு அம்மா அவர்களின் 72ஆவது அவதாரத்திருநாள் (03.03.2012) வெகு விமர்சையாக பக்தர்களினால் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் அதிகாலை அன்னைக்கு சிறப்பு அபிடேக, ஆராதனைகளுடன் விழா ஆரம்பமாகியது.

அருள்திரு அம்மாவின் இல்லத்திலிருந்து பக்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர் ஒன்றில் அடிகளாரை எழுந்தருள வேண்டி ஆலயத்திற்கு அழைத்து வந்தனர். வாத்தியங்கள், கிராமிய கலை, பண்பாட்டு நடனங்கள் என்று அணிகள் முன்னே செல்ல சீர்வரிசை, பட்டத்து யானை வரவேற்று அருள்திரு அம்மாவின் இரத பவனியை முன்னே நகர்த்தி வந்தது என்றே கூறமுடியும்.
ஆலயத்தில் அம்மாவுக்கு பாதபூஜை செய்து பக்தர்களினால் வரவேற்பு அளிக்கப்பட்டது.
இதனைத் தொடர்ந்து ஆலயத்தில் பூஜையை முடித்துக்கொண்டு தன் பக்தர்களுக்கு தரிசனம் வழங்கினார்.

அன்றைய தினம் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான செவ்வாடை பக்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.
அவதாரத்திருநாளை முன்னிட்டு அம்மா ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார்.

ஏற்கனவே, அவதாரத்திருநாளை முன்னிட்டு வருடாவருடம் நடைபெறும் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தேறியதும் அனைவரும் அறிந்ததே. இலவச கண் சிகிச்சை முகாம் பற்றிய விபரம் பக்கம் 18இல் பிரசுரமாகியுள்ளது.

***

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2012

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

மன்ற தொலைபேசி: 0434648416

(மன்றம் வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும் காலம் மட்டும்)

### April - பங்குனி - சித்திரை

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

| | | | | |
|---|---|---|---|---|
| 01.04.2012 | Sunday | பங்குனி | 19 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |
| 02.04.2012 | Monday | பங்குனி | 20 | 7.00p.m. – 8.00p.m. |
| 03.04.2012 | Tuesday | பங்குனி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| 04.04.2012 | Wednesday | பங்குனி | 22 | 7.00p.m. – 8.00p.m. |
| 05.04.2012 | Thursday | பங்குனி | 23 | From 7.15p.m. **பூசைகள் - குரு, விநாயகர், அன்னை சக்கரம் வரைதல் - தொண்டுகள்** |
| 06.04.2012 | Friday | பங்குனி | 24 | **Joint Prayer– பௌர்ணமி –**<br>மன்ற வருட நிறைவு **"கலச விளக்கு வேள்விப்பூசை"**<br>6.05p.m. – 7.00p.m. |
| 07.04.2012 | Saturday | பங்குனி | 25 | 7.00p.m. – 8.00p.m. |
| 08.04.2012 | Sunday | பங்குனி | 26 | **Joint Prayer –**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>**6.00p.m. – 8.30p.m.** |
| 09.04.2012 | Monday | பங்குனி | 27 | 7.00p.m. – 8.00p.m. |
| 10.04.2012 | Tuesday | பங்குனி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| 11.04.2012 | Wednesday | பங்குனி | 29 | 7.00p.m. – 8.00p.m. |
| 12.04.2012 | Thursday | பங்குனி | 30 | 7.00p.m. – 8.00p.m. |
| 13.04.2012 | Friday | சித்திரை | 01 | **Joint Prayer – சித்திரைத் தமிழ் "ஸ்ரீ நந்தன" வருடப் பிறப்பு**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>**7.15p.m. – 9.00p.m.** |
| 14.04.2012 | Saturday | சித்திரை | 02 | 7.00p.m. – 8.00p.m. |
| 15.04.2012 | Sunday | சித்திரை | 03 | **Joint Prayer –**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>**6.00p.m. – 8.30p.m.** |
| 16.04.2012 | Monday | சித்திரை | 04 | 7.00p.m. – 8.00p.m. |
| 17.04.2012 | Tuesday | சித்திரை | 05 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| 18.04.2012 | Wednesday | சித்திரை | 06 | 7.00p.m. – 8.00p.m. |
| 19.04.2012 | Thursday | சித்திரை | 07 | 7.00p.m. – 8.00p.m. |
| 20.04.2012 | Friday | சித்திரை | 08 | அமாவாசை–"1008 போற்றித்திருவுரு"மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>7.30p.m. – 9.00p.m. |
| 21.04.2012 | Saturday | சித்திரை | 09 | 7.00p.m. – 8.00p.m. |
| 22.04.2012 | Sunday | சித்திரை | 10 | **Joint Prayer –**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>**6.00p.m. – 8.30p.m.** |
| 23.04.2012 | Monday | சித்திரை | 11 | 7.00p.m. – 8.00p.m. |
| 24.04.2012 | Tuesday | சித்திரை | 12 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| 25.04.2012 | Wednesday | சித்திரை | 13 | 7.00p.m. – 8.00p.m. |
| 26.04.2012 | Thursday | சித்திரை | 14 | 7.00p.m. – 8.00p.m. |
| 27.04.2012 | Friday | சித்திரை | 15 | 7.00p.m. – 8.00p.m. |
| 28.04.2012 | Saturday | சித்திரை | 16 | 7.00p.m. – 8.00p.m. |
| 29.04.2012 | Sunday | சித்திரை | 17 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |
| 30.04.2012 | Monday | சித்திரை | 18 | 7.00p.m. – 8.00p.m. |

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2012

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 06.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 13.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road – Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 08.04.2012 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.04.2012 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Mulgrave

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

**Southern Community Centre,**
Rupert Drive – Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

Joint Prayers: Every Sunday

| | | | |
|---|---|---|---|
| 01.04.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 08.04.2012 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja" – "திருவிளக்குப் பூஜை" |
| 15.04.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 22.04.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 29.04.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

## ஆன்மிகத்தில் குறைந்தபேர் இருந்தாலும்:

"குட்டையில் உள்ள தண்ணீரேயானாலும், குடிக்கப் பயன்படுத்த வேண்டும். மிதிக்கப் பயன்படுத்தக்கூடாது. அதுபோல ஆன்மிகத்தில் குறைந்த பேர் ஈடுபட்டாலும் அதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆன்மிகத்திற்கு வந்துவிட்டுச் சண்டை சச்சரவுகளில் ஈடுபடக் கூடாது."

-அன்னையின் அருள்வாக்கு

# Sydney - Mandrams - Upcoming Events – April 2012

## □□□ Homebush

### Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre

Contact: 02-97643872, 0416217317

**Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 06.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 13.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## □□□ Westmead

### Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW (Australia)

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 06.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 13.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## குடும்ப ஒற்றுமை, மனித ஒற்றுமை

242 வகை நரம்புகள் அடங்கியுள்ள நரம்பு மண்டலத்தில் ஒரு நரம்பு பாதிக்கப்பட்டாலும் நரம்பு மண்டலமே பாதிக்கப்படுகிறது. அதுபோலவே குடும்பத்தில் ஒருவன் பாதிக்கப்பட்டாலும் நாட்டில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டாலும் குடும்பமும் பாதிப்பிற்கு ஆளாகின்றன.

வெட்டப்பட்ட மரம், செடி கொடிகள் மீண்டும் தளிர்த்து வாழத் தொடங்கிவிடுகின்றன. மனித இனத்தில் அந்த நிலை இல்லை. எனவே, குடும்பத்திலும் ஒற்றுமை தேவை, நாட்டிலும் ஒற்றுமை தேவை."

- அன்னையின் அருள்வாக்கு

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## காணாமற்போன மகன்

### தாக்கர்சேட்

நீலகிரி மலையில் குன்னூரில் வசிப்பவர் திரு.ஜம்னாதாஸ் தாக்கர் என்ற சேட். நல்ல வசதியானவர். தேயிலைத் தோட்டங்களுக்குச் சொந்தக்காரர். இவருக்கு ஒரே மகன். வாலிபப் பருவத்தில் உள்ளவன். என்ன காரணமோ...? ஒரு நாள் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயோ போய்விட்டான்.

தாக்கர் சேட் மகனைத் தேடிக் கண்டுபிடிக்கப் பலவாறு முயன்றார். பலனில்லை. அவன் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு சோதிடர்களிடம் போனார். இனி உங்கள் மகன் கிடைக்கமாட்டான் என்றனர். குறி சொல்லும் இடங்களைப்பற்றியெல்லாம் கேள்விப்பட்டு அங்கே போனார். மகன் கிடைக்கமாட்டான் என்ற பதில்தான் கிடைத்தது.

### கருமாதி பண்ணிவிடு

உள்ளம் சோர்ந்துபோன ஜம்னதாஸ் தாக்கர் சேட், கேரள மந்திரவாதிகளிடம் சென்றார். அவர்கள் பல பூசைகளையெல்லாம் செய்துவிட்டு “உன் மகன் இறந்து பல நாட்களாகிவிட்டன. இனி அவனுக்குக் கருமாதி காரியங்கள் பண்ணிவிடு” என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். இதற்கிடையில் சிலர் யாகம் செய்தால் மகன் கிடைப்பான் என்றனர். அவர் குழம்பினார்.

### உடனே மருவத்தூர் செல்லுங்கள்

இந்தச் சமயத்தில் தாக்கர் சேட்டின் வீட்டில் நண்பர்கள் சிலர், மகன் கிடைத்துவிட்டானா? என்று விசாரிக்க வந்தனர். அவர்கள் தாக்கர் சேட்டிடம் “நீங்கள் உடனே மருவத்தூர் போங்கள், அருள்வாக்கு கேளுங்கள், உங்கள் மகனைப் பற்றிய எல்லா விவரங்களையும் அம்மா சொல்லிவிடும்” என்றனர்.

### அம்மா சொல்லிய அருள்வாக்கு

தெய்வமே வந்து பேசுகிறது என்பதைக் கேட்ட சேட் உடனே மருவத்தூர் வந்தார். அப்போதெல்லாம் அருள்வாக்கு உடனுக்குடன் கிடைத்து வந்தது. அன்னையிடம் சென்று அருள்வாக்கு கேட்க உட்கார்ந்தார்.

“மகனே! உன் மகன் சாகவில்லை. ஔரங்காபாத் என்ற ஸ்தலத்தில் ஒரு ஸ்டூடியோவில் பணி செய்கிறான். அங்கு சென்று அவனைச் சந்திக்க முயற்சிக்காதே! தொடர்ந்து மூன்று அமாவாசைக்கு என் கோயிலுக்கு வா!

மூன்றாவது அமாவாசைக்கு இங்கு வரும்போது உன் மகனைப் பற்றிய செய்தி உனக்கு வரும். கருமாதியும் செய்ய வேண்டாம். யாகமும் செய்ய வேண்டாம் உத்தரவு!” என்றாள்.

மற்றவர்கள் கருமாதி செய்யச் சொன்னதையும், யாகம் செய்யச் சொன்னதையும் இங்கு அம்மா சொல்லிவிட்டதே! என்று சேட் ஆச்சரியப்பட்டுப் போனார். அம்மா சொன்ன அருள்வாக்கு அவருக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

### எப்படியும் பார்க்க வேண்டும்

குன்னூருக்கு வந்த ஜம்னதாஸ் தாக்கர் தன் மனைவியிடம் அம்மா சொன்ன அருள்வாக்கைச் சொன்னார்.

(தொடர்ச்சி...11ஆம் பக்கம்)

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

தாக்கர் தம்பதியினர் மகனைப் பிரிந்து மூன்று மாதங்களாகிவிட்டன. ஔரங்காபாத்தில் ஒரு ஸ்டுடியோவில் மகன் இருக்கிறான் என்று தெரிந்ததும், எப்படியும் மகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அந்தத் தம்பதியினருக்கு ஏற்பட்டது. ஔரங்காபாத் சென்று பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்று நினைத்து சேட் மகனைத் தேடி ஔரங்காபாத் புறப்பட்டார்.

### எங்கே போயிருக்கிறான்?

ஔரங்காபாத்தில் உள்ள ஸ்டுடியோக்கள் ஒவ்வொன்றிலும் ஏறித் தன் மகன் பெயரையும், அடையாளத்தையும் சொல்லி விசாரித்தார். ஒருநாள் மாலை ஒரு ஸ்டுடியோவிற்குச் சென்று விசாரித்தார். மகனின் பெயரைச் சொன்னவுடனே அந்தக் கூடத்தின் சொந்தக்காரர் "ஆமாம்...இங்கேதான் வேலை பார்த்து வந்தான்..." என்றார். சேட் சந்தோஷ மிகுதியால் ஆவலோடு "மகனைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகிவிட்டன. அவனை வரச் சொல்லுங்கள்" என்றார்.

அதுகேட்ட அந்தக் கூடத்தின் சொந்தக்காரர் "அடடா... நீங்கள் இன்று காலையில் இங்கு வந்திருக்கக்கூடாதா..? இன்று மதியம்தானே கணக்குப் பார்த்து சம்பளப் பாக்கியை வாங்கிக்கொண்டு போனான்" என்றார் அவர்.

"எங்கே போயிருக்கிறான் தெரியுமா...?" என்று கேட்டார் சேட்.

"அவன் எங்களிடம் எதுவும் சொல்லிவிட்டுப் போகவில்லையே" என்று பதில் கூறினார் அவர்.

### சொன்னபடி நடக்கவேண்டும்

குன்னூருக்குத் திரும்பி வந்தார் சேட். ஒன்று மட்டும் அந்தத் தம்பதியினருக்கு ஆறுதலளித்தது. மகன் இறந்தே போய்விட்டான் என்று குறி சொல்பவர்கள் கூறினார்கள். ஆனால், மருவத்தூர் மாதா சொன்னபடி ஔரங்காபாத்தில் மகன் இருக்கிறான் என்று உறுதிசெய்துகொள்ள முடிந்ததை எண்ணி ஆறுதல் அடைந்தனர்.

### நடைப்பிணமானார்

அம்மா கூறியபடி தொடர்ந்து மூன்று அமாவாசைக்கு மருவத்தூர் வந்தார். மூன்றாவது அமாவாசைக்குச் சித்தர்பீடம் வரும்போது மகனைப் பற்றிய செய்தி வரும் என்று அம்மா அருள்வாக்கில் சொன்னது சேட்டின் மனதில் ஆழப்பதிந்திருந்தது.

மூன்றாவது அமாவாசைக்குச் சித்தர்பீடத்திற்கு வந்ததும், மகனைப் பற்றிய செய்தி வரும் என்ற ஆவல், மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு கலந்த நிலையில் சுற்றிச் சுற்றி வந்தார். அன்று முழுவதும் நல்ல செய்தியை எதிர்பார்த்தார். அன்னையின் திருமுன் பலமுறை விழுந்து வணங்கினார்.

மாலை 6 மணிக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் சேட்டுக்கு எந்தச் செய்தியும் வரவில்லை. இனி ஊருக்குப் போகலாம் என்று நினைத்து அன்னையை வணங்கிவிட்டு நடைப்பிணம்போல் சித்தர்பீடத்தைவிட்டு வெளியே போக நடந்தார். நாலுகால் மண்டபப்படிகளில் மெதுவாக ஏறினார்.

### தொலைபேசியில் செய்தி

அப்போது... "இங்கு ஜம்னாதாஸ் சேட் யார்? குன்னூரிலிருந்து வந்த ஜம்னதாஸ் சேட் யார்?" என்று கேட்டுக்கொண்டு சித்தர் பீடத்துப் பணியாளர் ஒருவர் அங்கு வந்து விசாரித்தார். படியில் நின்றபடித் திரும்பிப் பார்த்தார். சேட். "நான்தான் குன்னூரில் இருந்து வந்திருக்கிறேன். என் பெயர்தான் ஜம்னாதாஸ் சேட். எதற்காகக் கூப்பிட்டீர்கள்?" என்று விசாரித்தார்.

"உங்களைக் குன்னூரிலிருந்து தொலைபேசியில் கூப்பிடுகிறார்கள். அலுவலகத்திற்கு வந்து தொலைபேசியில் பேசுங்கள்..." என்றார் பணியாளர்.

அலுவலகம் சென்று தொலைபேசியை எடுத்தார் சேட். அவர் மனைவி பேசினார். "நம் மகன் சற்று முன்பு வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டான். உடனே புறப்பட்டு வாருங்கள்" என்றார் அவர்.

(தொடர்ச்சி....17ஆம் பக்கம்)

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே!



ஆதிபராசக்தியே!

2012

ஆதிபராசக்தி சித்தர் பீடம்

மேல்மருவத்தூர்

ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன வருடம்

## ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குனி | 24 | 06.04.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| சித்திரை | 8 | 20.04.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 23 | 05.05.2012 | சனி | சித்திரை பௌர்ணமி |
| வைகாசி | 7 | 20.05.2012 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 22 | 04.06.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஆனி | 05 | 19.06.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 19 | 03.07.2012 | செவ்வாய் | பௌர்ணமி |
| ஆடி | 03 | 18.07.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 07 | 22.07.2012 | ஞாயிறு | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 08 | 23.07.2012 | திங்கள் | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 17 | 01.08.2012 | புதன் | பௌர்ணமி |
| ஆவணி | 01 | 17.08.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 15 | 31.08.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| ஆவணி | 19 | 04.09.2012 | செவ்வாய் | ஆன்மிககுரு அம்மா திருமணநாள் |
| ஆவணி | 30 | 15.09.2012 | சனி | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 13 | 29.09.2012 | சனி | பௌர்ணமி |
| புரட்டாசி | 29 | 15.10.2012 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 30 | 16.10.2012 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| ஐப்பசி | 13 | 29.10.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஐப்பசி | 28 | 13.11.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 13 | 28.11.2012 | புதன் | பௌர்ணமி – கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 27 | 12.12.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 28 | 13.12.2012 | வியாழன் | அமாவாசை |
| மார்கழி | 11 | 25.12.2012 | செவ்வாய் | கிறிஸ்மஸ் |
| மார்கழி | 14 | 28.12.2012 | வெள்ளி | பௌர்ணமி |

# Brisbane – Mandram – Upcoming Events – May 2012



ஓம் சக்தி!

**Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram**
**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்**

P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074



"Service and Devotion are the Eyes of Spirituality"
"Spirituality is knowing, understanding and realizing Thyself" – **Melmaruvathur Amma's Oracle.**

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

## 06.05.2012

**Sunday**

ஞாயிற்றுக்கிழமை – சித்திரை 24

**சித்திரை பௌர்ணமி**

**1 Lalina Street, Middle Park – Qld 4074**

**கூட்டுப்பிரார்த்தனை:**
மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

Contacts:

| Sakthi Para | Sakthi Jegatheesan | Sakthi Thilaga Vijeyakumar |
|---|---|---|
| Mob: 0438 778 483 | 07-33550932 | 07-38234628 |

நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் – நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

ஆன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயுள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.
உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli'Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

# திருமதி அம்மா பதில்கள்



இலட்சுமி பங்காரு அடிகளார்

**நம்மைப் பெற்ற தாய்-தந்தையை நாம் எப்படி வைத்திருக்க வேண்டும்? (ஆண் மகனாய் இருந்தால், பெண் மகளாய் இருந்தால்)**

ஆண், பெண் இருபாலாருக்கும் தாய், தந்தையர் என்றால் ஒரே மதிப்புத்தான் இருக்க வேண்டும். பெற்றோருக்குப் பிள்ளைகள் என்றால் சற்று அன்பும், ஆசையும் அதிகம். ஆண்மகன் தன்னோடு இன்ப, துன்பங்களில் பங்குகொள்பவன். பெண்பிள்ளைகள் ஒரு இடத்திற்குச்சென்று வாழ்க்கைப்படச் சென்றுவிடுவதால், பிரிவின் காரணமாக பாசம் அதிகரிக்கின்றது. ஆண் மகனுக்குத் தன் பெற்றோரை ஆதரிக்கும் பொறுப்பு அதிகம்.

படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலை இறைவன் செய்வதாக இந்துமதம் சொல்கிறது. அத்தகைய இறைவனை யாரும் கண்ணால் பார்த்தது கிடையாது. ஆனால், படைத்தல், காத்தல் தொழிலுக்கு உற்ற கருவியாக இருப்பவர்கள் பெற்றோர். ஆகையால் பெற்றோரைத் தெய்வமாக மதிக்க வேண்டும். அதற்காக ‘‘அம்மா என்றழைக்காத உயிரில்லையே’’ என்றும் ‘‘தந்தையைப்போல் ஒரு தெய்வமில்லை’’ என்றும் பாடிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. இவர்கள் நம்மைப்பெற்ற தாய், தந்தையர் என்ற இரத்தத்தோடும், சதையோடும், உள்ளுணர்வுகளோடும் கூடிய பாசம் இருக்க வேண்டும். அவர்கள் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்கும் மதிப்பு இருக்க வேண்டும். அவர்களை எந்த நேரத்திலும் அலட்சியப்படுத்தக்கூடாது.’’எப்போதும், எதையும் நம் நன்மையைக் கருதியே செய்வார்கள்’’ என்ற ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டும்.

அந்தக் காலத்தைப்போல பெற்றோர் பிள்ளைகளிடம் அவ்வளவு கெடுபிடியாக இப்போது இருப்பதில்லை. சில பெற்றோர் பிள்ளைகளிடம் நண்பர்களைப் போலவே இப்போது பழகுகிறார்கள்.

பெண் பிள்ளைகள் ஒரு குடும்பத்திற்கு வாழச் சென்று, குடும்பத்திலுள்ள இன்ப, துன்பங்களை அனுபவித்து, தானும் ஒரு தாயாகி, ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்குவது எவ்வளவு கஷ்டம் என்பதை அனுபவப்பூர்வமாக வாழ்க்கையில் உணர்வதால் அவர்கள் பெற்றோரிடம் ஆசையாகவும், அன்பாகவும் இருக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் வாழ்க்கையில் பணம்தான் கஷ்டநஷ்டம் என்று நினைக்கிறார்கள். உணர்வுகளுக்கு அவர்கள் அவ்வளவு மதிப்புக் கொடுப்பதில்லை. ஆசை, அன்பு இருந்தாலும் கௌரவமாக அடக்கிக் கொள்கிறார்கள். அதனால்தான் பெற்றோரிடம் அவர்கள் வெளிப்படையாக அன்பைக் காட்டுவதில்லை.

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பெற்றோர் மனம் நோகாமல் நடந்துகொள்ள வேண்டும். அதுவும் வயதான காலத்தில் அவர்கள் ஒதுக்கி அலட்சியப்படுத்தாமல், நோய்வாய்ப்பட்டு இருக்கும் காலத்தில் ஆதரவாக நடந்துகொள்ள வேண்டும்.

□□□

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 01.04.2012 | ஞாயிறு | பங்குனி | 19 | இராம நவமி |
| 05.04.2012 | வியாழன் | பங்குனி | 23 | பங்குனி உத்திரம் |
| 06.04.2012 | வெள்ளி | பங்குனி | 24 | அனுமர் ஜெயந்தி<br>**பௌர்ணமி தினம் – மன்ற "கலச விளக்கு வேள்விப் பூசை"**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 08.04.2012 | ஞாயிறு | பங்குனி | 26 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 13.04.2012 | வெள்ளி | சித்திரை | 01 | தமிழ் "ஸ்ரீ நந்தன" வருடப்பிறப்பு<br>**1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 20.04.2012 | வெள்ளி | சித்திரை | 08 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 24.04.2012 | செவ்வாய் | சித்திரை | 12 | **அட்சய திரிதியை** |
| 01.05.2012 | செவ்வாய் | சித்திரை | 19 | **திரிசூர் பூரம்** |
| 05.05.2012 | சனி | சித்திரை | 23 | **சித்திரை பௌர்ணமி**<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 20.05.2012 | ஞாயிறு | வைகாசி | 07 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 03.06.2012 | ஞாயிறு | வைகாசி | 21 | **வைகாசி விசாகம்** |
| 04.06.2012 | திங்கள் | வைகாசி | 22 | பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 10.06.2012 | ஞாயிறு | வைகாசி | 28 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 19.06.2012 | செவ்வாய் | ஆனி | 05 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 26.06.2012 | செவ்வாய் | ஆனி | 12 | **ஆனி உத்திரம்** |
| 03.07.2012 | செவ்வாய் | ஆனி | 19 | குரு பூர்ணிமா – பௌர்ணமி தினம் –<br>"பாத பூஜை", 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 18.07.2012 | புதன் | ஆடி | 03 | ஆடி அமாவாசை விரதம்<br>அமாவாசை – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 24.08.2012 | செவ்வாய் | ஆவணி | 09 | நாக பஞ்சமி |

# Divine Miracles at Melmaruvathur

## The man who was about to die was sent to prison:

Cheyyur is a town which belongs to Maduranthakam circle in Chenglepet district. A woman named Thavamani lived there and was a devotee of Mother. Her husband was Sri Venugopal. In the year 1976 on a Sunday, Sakthi Thavamani was engaged in household chores. Her husband Venugopal and some of his friends started out for Chennai that day. When they were about to start, the Rahu kaalam for the day started, which is considered inauspicious. Thavamani was scared of warning her husband about the inauspicious period because he had no faith in such things. That day in the evening as Venugopal and his friends were travelling by car they came across the procession of a political party coming on the road. Venugopal and his friends got down from the car with the intention of crossing that procession. Suddenly a fight broke out and there was a great commotion. It was followed by a lathi charge and the bursting of tear gas shells by the police. It all happened so fast that before the friends realized what was happening they were rounded up by the police and taken to the Central Jail at Chennai. A number of others who had come out from cinema halls or who had come shopping, were also picked up by the police. Several lawyers and doctors shared the same fate.

Sakthi Thavamani waited patiently with her children till late at night for Venugopal to return. When there was no sign of him even on the next afternoon, she got scared and started praying to Mother. She said, “Mother, kindly get my husband back home”. Some of Venugopal’s friends and brothers searched in all directions for him without being aware that he was languishing in jail. Someone reported that a body was afloat in Coovum and added that it resembled Venugopal. Thavamani was terrified.

Sakthi Thavamani’s father was a high ranked official in the government. A policeman came to him and reported that his son-in-law was in the Central Jail. He went immediately and got him out on bail and took him to Kanchipuram. The wife did not know anything about this and she rushed to Mother at Maruvathur and went for divine revelation. She cried profusely praying for her husband’s welfare. Mother said calmly, “Daughter! Do not lose heart! I merely sent one who was going to the gates of hell to a prison! Do not be frightened. Before you reach there will be good news for you. Your husband is safe”.

## A young Brahmin who wanted to commit suicide:

There was a Brahmin youth in Tuticorin who belonged to a very poor family. His father, who was the sole bread winner for the family, had died. The young man had four sisters and a brother. The family had seven members in all. Two daughters were married off some how and the brother managed to secure a job. But this young man could not secure a job. The remaining two sisters had to be married off. The mother was in distress because of her responsibility. The young man said; “Sakthi! I have thought a great deal about to commit suicide and disappear, this. By chance I happened to hear about Maruvathur and I have come for divine revelation.”

Mother said to him, “I am there to take care of your family, my son! I shall get your sisters married. I shall send you abroad. Do not even entertain crazy ideas like suicide.”

The young man felt rejuvenated after his visit to Mother! He regained faith. He repeated the ‘108 Potri and 1008 Potri’ daily and worshiped the Mother. He appeared for the T.N.P.S.C. examination and he got a job on the basis of his merit. He did not have to pay any bribe for getting a job. He realized that the food on their plates was what the Mother had put on them and his eyes were filled with tears of happiness and gratitude.

*****

**அருள்வாக்கும் அனுபவங்களும்....**

**உத்தரவு மீறியது**

"அவனைப் போய்ப் பார்க்க முயற்சி செய்யாதே!" என்று அம்மா சொல்லியிருந்தும் பிள்ளைப்பாசம் காரணமாக அந்த சேட் அன்னையின் உத்தரவை மீறிச் சென்றார். சற்று முன்தான் அவன் சம்பளக் கணக்குத் தீர்த்துக்கொண்டு சென்றுவிட்டான் என்று அந்த ஸ்டுடியோ சொந்தக்காரர் சொன்னார். மன உளைச்சலோடு திரும்பி அவதிப்பட்டார்.

அன்னை சொல்லியபடி மூன்று அமாவாசை வந்து போனார். அவர் மகனைத் திரும்பப் பெற்றார்.

# மெல்பேர்ணில்
# அன்னை நிகழ்த்திய மருத்துவ அற்புதம்

**பெங்களூரிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து மெல்பேர்ணை வதிவிடமாகக்கொண்டு வாழ்ந்து வரும் தம்பதியினர். அவர்களின் அழகான குழந்தைகள். செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் கூட்டு வழிபாடுகளிலும் சிறப்பு விழா நாட்களிலும் குடும்பமாக வந்து கலந்துகொண்டு குருவையும் அன்னையையும் வேண்டி வருவது வழக்கமாக இருந்தது.**

**திடீரென குடும்பத்தின் தலைவிக்கு மேல் வயிற்றுப் பகுதியில் வலி ஏற்பட்டு மருத்துவரை நாடினர். ஸ்கேன் செய்துபார்த்தபோது பித்தப்பையில் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டது. சத்திரசிகிச்சை மூலம்தான் சிகிச்சை மேற்கொள்ள முடியும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது.**

**மன்றத்தில் எலுமிச்சம்பழ விளக்கேற்றி அம்மாவை வேண்டி வழிபட்டனர். மனைவி மன்றத்திற்கு வர முடியாதுவிட்டாலும் கணவர் வந்து விளக்கேற்றி வழிபட்டார்.**

**சத்திரசிகிச்சைக்கு (ஆபரேஷன்) முதல் ஒரு ஸ்கேன் எடுத்துப் பார்க்கப்போவதற்கு முன்பு முதல்நாள் செவ்வாய்க்கிழமை மன்றத்திற்கு தம்பதியினராக வந்து எலுமிச்சம் பழ விளக்கேற்றி விட்டு கூட்டு வழிபாடு முடிந்ததும் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு அன்னையின் முன்பாக வைக்கப்பட்டிருந்த எலுமிச்சம்பழம் பிரசாதம் ஒன்றையும் அம்மாவின் துணை வேண்டி பெற்றுச் சென்றனர்.**

**புதன்கிழமை அன்று எடுத்த ஸ்கேனில் ஒன்றுமே கண்டறியப்படாததால் ஆபரேஷன் தேவையில்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.**

**கற்கள் மறைந்துபோனதற்கு விஞ்ஞான; மருத்துவ விளக்கம் கூற முனைந்தாலும் அல்லது அற்புதமான சம்பவம் என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டாலும் அம்மாவின்பால் சரணடைந்துவிட்டால் விதியையே மாற்றியமைப்பாள் என்பது சத்தியம்.**

அருள்திரு அம்மாவின் அவதாரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்று வரும்

# இலவச கண் சிகிச்சை முகாம்

"ஓம் ஏழையர் அன்னை போற்றி ஓம்"
"ஓம் கண்ணொளி காப்பாய் போற்றி ஓம்"

அன்னையின் அருள்வாக்கின் வண்ணம் 1986ஆம் ஆண்டு முதல் இலவச கண் சிகிச்சை முகாம் வருடாவருடம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனை, ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்று வருகின்றது.

அன்னையினால் அருளப்பட்ட பொது அருள்வாக்கானது:

**"ஐம்புலன்களிலே முக்கியமானது கண். இங்குள்ள ஆதிபராசக்தி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு தினசரி இலவச சிகிச்சை செய்வது போல மருவத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்து ஏழை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி கண் சிகிச்சை முகாம் செய்ய ஏற்பாடு செய்"**

11.02.2012ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களால் ஆரம்பித்து வைத்த கண் சிகிச்சை மருத்துவ முகாம் தொடர்ந்து நான்கு நாட்களாக நடைபெற்று 14.02.2012 அன்று நிறைவு பெற்றது.

மேல்மருவத்தூரைச் சுற்றியுள்ள 750இற்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து வந்திருந்த 3000இற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவச பரிசோதனை செய்து இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டது.

முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1125 நபர்களுக்கு இலவசமாகக் கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர்களில் 1120 நபர்களுக்கு கண்ணுக்குள் விழி லென்ஸ் பொருத்தப்பட்டது.

நிறைவு விழாவில் ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களும் திருமதி அம்மா அவர்களும் கண் பார்வை குறைவு உள்ள 1100 பேர்களுக்கு இலவசமாகக் கண் கண்ணாடிகளை வழங்கினார்கள்.

| வருடம் | கண் புரை அறுவை சிகிச்சை | IOL விழி லென்ஸ் பொருத்தப்பட்டவர்கள் |
|---|---|---|
| 1986 | 227 | - |
| 1993 | 394 | - |
| 1994 | 399 | - |
| 1995 | 417 | 6 |
| 1996 | 605 | 9 |
| 1997 | 632 | 18 |
| 1998 | 683 | 516 |
| 1999 | 669 | 579 |
| 2000 | 732 | 712 |
| 2001 | 771 | 730 |
| 2002 | 935 | 915 |
| 2003 | 1019 | 1008 |
| 2004 | 1109 | 1097 |
| 2005 | 1151 | 1140 |
| 2006 | 1155 | 1141 |
| 2007 | 1157 | 1142 |
| 2008 | 1162 | 1152 |
| 2009 | 1433 | 1405 |
| 2010 | 1297 | 1280 |
| 2011 | 1008 | 1008 |
| 2012 | 1125 | 1120 |

இதுவரை நடைபெற்ற முகாம்களில் 18092 நபர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டும் அவர்களில் 14978 நபர்களுக்கு கண்ணுக்குள் விழி லென்ஸ் (IOL) பொருத்தப்பட்டுள்ளது.

□□□